www.Padasalai.Net www.TrbTnpsc.com

ARI

# என் தமிழ்

9 ஆம் வகுப்பு

இரண்டாம் பருவம்

ஆசிரியர்
M.காய்த்ரி தேவி, M.A., B.Ed., M.Phil.
நாகர்கோவில்

www.Padasalai.Net

ARI PUBLICATIONS
225/14, Tiruchendur Road, Palayamkottai, Tirunelveli - 627 002.
For contact : 88708 69095, 98949 17088
email: aripublicationstvl@gmail.com
₹ 75.00

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**ARI PUBLICATIONS**

**9 ஆம் வகுப்பு தமிழ்**

(Under Uniform System of School Education)

WARNING: *All rights reserved. No part of this publication may be reproduced or stored in a retrieval system or transmitted in any form or by any means without the prior written permission of the Publisher, the copy-right holder.*

**முதல் பதிப்பு : 2018**

www.Padasalai.Net

**OUR BANK DETAILS**

| | | |
|---|---|---|
| Account Name | : | **ARI PUBLICATIONS** |
| Account Number | : | **510101006536226** |
| IFSC Code | : | **CORP0000086** |
| Bank Name | : | Corporation Bank |
| Branch Name | : | Palayamkottai |

Stockist :

**M. ARUMUGAM PILLAI BOOK CENTRE**

North Bazaar, Palayamkottai, Tirunelveli.

Ph.: 0462 - 2575203

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html


www.Padasalai.Net www.TrbTnpsc.com




இரண்டாம் பருவம்

உரைநடை உலகம்

# இயல் 1 கல்வியில் சிறந்த பெண்கள்





**நுழையும் முன்**

கையிலுள்ள செல்வத்தைக் காட்டிலும் நிலைத்த புகழுடைய கல்விதான் ஒருவருக்கு வாழ்வின் இறுதிவரையிலும் கைகொடுக்கிறது. கல்வி பெறுதலே பெண்டிர்க்கு அழகு. சங்ககாலத்தில் உயர்ந்திருந்த பெண்கல்வி, இடைக்காலத்தில் ஒடுங்கிப்போனது. பெண்கல்வியை மீட்டெடுக்க உலகம் முழுவதும் சான்றோர் பலர் பாடுபட்டிருக்கின்றனர். மருத்துவர் முத்துலெட்சுமி முதல் மலாலா வரை ஒவ்வொரு சாதனைப் பெண்ணின் வரலாற்றிலும் ஒருசோதனைக் காலமும் ஒரு வேதனை முகமும் இருக்கின்றது. இனி, பெண்கல்வி காலூன்றிக் கடந்து வந்த பாதைகளில் நடந்து செல்லும் வில்லிசையைச் செவிமடுப்போம்.

www.Padasalai.Net

## பெண்மை - புரட்சி

**முத்துலெட்சுமி (1886 – 1968)**



தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்

இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

## பெண்மை - துணிவு

**மூவலூர் இராமாமிர்தம் (1883 – 1962)**



தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி; எழுத்தாளர்; திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர். தமிழக அரசு 8ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கிவருகிறது.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

## பெண்மை - உயர்வு

**பண்டித ரமாபாய் (1858 – 1922)**



இவர் சமூகத் தன்னார்வலர்.

தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர்.

பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

## பெண்மை - சிறப்பு

**ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் (1870 – 1960)**



பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் மருத்துவராகி, தமிழகத்திற்கு வந்து, வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்.

## பெண்மை - அறிவு

**சாவித்திரிபாய் பூலே (1831 – 1897)**



1848 இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர்.

www.Padasalai.Net

### தெரிந்து தெளிவோம்

**பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்**

ஈ.வெ.ரா. – நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் பட்டமேற்படிப்பிற்கு உரியது.

சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் – கல்வி, திருமண உதவித் தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது. காண்க: tavikaspedia.in

**தனித் தமிழில் சிறந்த நீலாம்பிகை அம்மையார் (1903 – 1943)**

மறைமலையடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப பற்றுடையவர்; இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

**கோத்தாரி கல்விக் குழு**

1964 ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

**சாரதா சட்டம்**

பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே, அதைத் தடுக்க 1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

**ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் (1906 – 1955)**

தமிழ், இலக்கியம் அறிவியல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாகப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## தெரிந்து தெளிவோம்

**சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் சிலர்**

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார் வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

**யார் இவர்?**

பாகிஸ்தானில், பெண்கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கியபோது மலாலாவின் வயது பன்னிரண்டு (1997).



புத்தக பக்கம் எண்: 7

## கற்பவை கற்றபின்

**1. இன்றைய சாதனைப் பெண்மணிகள் என்னும் தலைப்பில் தொகுப்பேடு உருவாக்குக.**

இன்றைய சாதனை பெண்கள்

**உபாசனா மகதி** – பார்வையற்றவர்களுக்கான இந்தியாவின் முதல் வாழ்வியல் இதழை நடத்தி வருகிறார். உபாசனா மகதி. பிரெய்லி முறையில் வாசிக்கக்கூடிய இந்த இதழின் உரிமையாளர், ஆசிரியர், வெளியீட்டாளர் எல்லாம் உபாசனாதான். போர்ப்ஸ் பத்திரிகையின், 30 வயதுக்கு உட்பட்ட சாதனையாளர்கள் பட்டியலில் இடம் பிடித்தவர், உபாசானா.



**P.V.சிந்து, சாய்னா நெக்வால்** – ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பேட்மிண்டன் இந்திய பெண்மணி.



**ஸ்மிரிதி மந்தானா** – 2017 மகளிர் உலக கோப்பையில் அதிக ரன் குவித்து இந்தியாவை இறுதிபோட்டி வரை அழைத்துச் சென்ற இளம் மங்கை. வளர்ந்து வரும் கிரிக்கெட் வீராங்கனை.



**மீரா பாய் சானு** – உலக பளு தூக்குதல் சாம்பியன் ஷிப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்த இந்திய விராங்கனை மீரா பாய் சானு.

கோல் ரத்னா விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்ட மணிப்பூரை சேர்ந்த 24 வயதான மீராபாய் கடந்த ஆண்டு நடந்த உலக



http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பளுதூக்குதல் போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்ததுடன் இந்த ஆண்டில் நடந்த காமன் வெல்த் விளையாட்டு போட்டியிலும் தங்கப்பதக்கம் வென்று இருந்தார். காயம் காரணமாக இந்தோனேஷியாவில் நடந்த ஆசிய விளையாட்டு போட்டியில் அவர் பங்கேற்கவில்லை. ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கம் 2 வெள்ளிப் பதக்கம் வென்றவருமான இந்திய வீராங்கனை ஹிமாதால.

இந்திய ஆக்கி அணி விராங்கனை சவிதா பூனிபா.

2016–ல் ஒலிம்பிக்கில் சாதித்தவர் சிந்து (பேட்மிண்டன்) சாக்ஷி மாலிக் (மல்யுத்தம்) தீபா கர்மாகர் (ஜிம்னாஸ்டிக்ஸ்) ஆகியோருக்கு கோல்ரத்னா விருது வழங்கப்பட்டது.

காமன் வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டு போட்டியில் பதக்கம் வென்ற இந்திய டேபிள் டென்னிஸ் விராங்கனை மனிகா பத்ரா அர்ஜினா விருது பட்டியலில் இடம் பெருகின்றார்.

**2. கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுக.**

**தொடர்கள்:**

- கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
- கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
- கல்வி கரையில கற்பவர் நாள்சில
- கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு
- கல்வியழகே அழகு

www.Padasalai.Net

**பொன்மொழிகள்:**

- கற்ற கல்வியும் பெற்ற செல்வமும் கடைசி மூச்சுவரை பிறருக்குக் கொடுக்கத்தான்.
- எடுத்தால் குறைவது செல்வம். கொடுத்தால் வளர்வது கல்வி.
- கல்வி ஓர் அணிகலன், அணிந்தால் அழகு தரும், அணிவித்தால் சிறப்பினைத் தரும்.

**விடை:**

**தொடர்கள்:**

**கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு:**

விவேகானந்தர் அமெரிக்கப் பயணம் சென்றார். சிக்காகோவில் நடந்த உலக மாநாட்டில் கலந்து கொண்டு பேசத் தொடங்கினார். "அமெரிக்க நாட்டு சகோதரிகளே, சகோதர்களே" என்று பேசத் தொடங்கினார். அச்சொற்களில் அவர் வெளியிட்ட அன்பினால் அங்கு கூடியிருந்த ஏழாயிரம் மக்களையும் எழுந்து நின்று கரவொலி எழுப்பச் செய்தது. உலகத்தை அறியாத புதியவராக அமெரிக்க வந்த விவேகானந்தர் உலகறிந்த மனிதராகிவிட்டார். அந்த நாட்டில் உரையாற்றும் போது "வழிகள் பல; சென்றடையும் இலட்சியம் ஒன்று மதங்கள்பல கடவுள் ஒருவர் என்ற ரிக் வேதக் கருத்தை விளக்கினார். அதன்பின் அமெரிக்காவின் பத்திரிக்கைகள் விவேகானந்தரின் படத்தையும், கருத்துகளையும் வெளியிட்டன. அமெரிக்க மக்களின் உள்ளம் கவர்ந்த மனிதர் ஆனார். நம் நாட்டிற்கும் சிறப்பினைப் பெற்றுத் தந்தார். "கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற ஔவையாரின் பொன்மொழி சிறப்பானதாகும்.

**கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி:**

மனிதனை முழுமையாக்கும் தகுதி கல்விக்கு உண்டு. நாம் பலவகையான செல்வங்களைப் பெற்றிருந்தாலும் அவற்றைவிடவும் சிறந்த செல்வம் "கல்விச் செல்வம்". இச்செல்வம் நம்மை விட்டுச் செல்லாது ஏனைய செல்வங்கள் மெய்யான செல்வங்கள் அல்ல. கல்விச் செல்வம் மட்டுமே மெய்யான செல்வமாகக் கருதப்படும்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



வெள்ளத்தால் அழியாது வெந்தழலால்
வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவு றாது

ஆம்! கல்வியானது பிறர்க்கு எடுத்துச் சொல்ல அளவில்லாமல் பெருகும். செல்வத்தைப் பாதுகாக்க அளவுகடந்த முயற்சி தேவை. மெய்ப் பொருளான கல்வியைப் பாதுகாக்க வேண்டியதில்லை. "கற்றிவார் கண்டது அடக்கம்" அடங்காதார் பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர்" – என்றபடி நீ சிறிதும் பெருமை பாராட்டாமலும், செருக்கு அடையாமலும், பணிந்த செயலும், எல்லா உயிர்களிடத்தில் அன்பும், நல்லொழுக்கமும் பெற்று வாழ்வது தான் உண்மையான கல்வி இதனைக் கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி என்கிறார் ஔவையார்.

**கல்விக் கரையில கற்பவர் நாள் சில:**

கல்விக்கு கரை என்பது கிடையாது. கல்வியே மக்களுக்குத் தேடி வைக்கத் தக்க "அழியா செல்வம்". ஆனால், கற்பவரின் வாழ்நாள் மிகக்குறைவு. கல்லாதவரே ஆயினும் கற்றோரைச் சேர்ந்து பழகினால் பண்பட்ட மெய்யறிவு பெறுவர். 'கல்வியால்' மட்டுமே மனிதன் மனிதனாக முடியும். கல்வி ஒருவனை எப்படி உருவாக்குகிறதோ அப்படியே அவன் உருவாகின்றான். கல்வியும் வாழ்க்கையும் பிரிக்க முடியாத ஒன்று. கல்வியின் பயன் சாதாரண மனிதன் எல்லா பரிமாணங்களிலும் வளர்வதற்கும் வாழ்க்கையின் உண்மைப் பொருளை அறிவதற்கும் கல்வி தோற்றுவாயாக உள்ளது. அக்கல்வியை ஏட்டுக் கல்வியாக இல்லாமல் வாழ்க்கைக் கல்வியாய் பெற்று வாழ்வில் மகிழ்வாக இருக்கலாம். சில நாளில் தோன்றி சில நாளிலில் மறைந்து போவதாகிய இம்மானுடப் பிறவியில் ஏழுபிறவிலும் அழியாச் செல்வமாகிய கல்வியைப் பெற்று வாழ வேண்டும்.

**கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு:**

"கற்றது கைம் மணளவு கல்லாதது உலகளவு" என்பது பழமொழி. அறிவு வளர்ச்சி என்பது தொடர் கதை. அதற்கு முடிவில்லை. ஒவ்வொரும் ஒவ்வொரு நாளும் கற்றுக் கொண்டே இருக்கிறோம் அள்ள அள்ளக் குறையாத வற்றாத செல்வம். அதுபோல கற்க கற்க மேலும் வளர்ந்து வரும் 'கல்விச் செல்வம்'. வற்றாத ஊற்று அறிவும் ஆற்றலும் சேர்ந்து செயல்பட்டால் புதுப்புது செயல்பாடுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். நாம் கற்று விட்டோம் என்று செருக்கு கொள்ளக் கூடாது. தனக்குத் தான் எல்லாம் தெரியும் என்று நினைப்பவர்களைக் கண்டு ஔவையார் கூறுகிறார். 'கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு. கலைமகளும் தினமும் படித்துக் கொண்டுதான் இருக்கிறாள் என்றால் கல்விக்குத் தேவதையே இன்னும் படிக்கிறாள் என்றால் கல்வி என்ற மிகப் பெரிய கடலை நீந்திக் கடப்பது அரிதான ஒன்று என்பதை ஔவையார் அழகாகக் கூறியுள்ளார்.

**கல்வியழகே அழகு:**

கல்வியே வாழ்க்கையின் அறியாமையை நீக்கும். ஏழு பிறவியிலும் ஒருவரைத் தொடர்வது கல்வி மட்டுமே. சான்றோர் "கல்வியே" மக்கட்குத் தேடிவைக்கத் தக்க அழியாத செல்வம். புறஉலக ஆராய்ச்சிக்கு 'விஞ்ஞானம்' கொழு கொம்பு போன்றது. அன்றே நம் தமிழர் கண்ட "மெஞ்ஞான அறிவு". இன்று விஞ்ஞானத்தால் உறுதி செய்யப்பட்டு வியந்து நிற்கின்றனர் அறிவியலார். 'இயற்கை இன்பக்கலம் 'கலித்தொகை'; இயற்கை வாழ்வில்லம் 'திருக்குறள்'; இயற்கை இன்ப வாழ்வு நிலையங்கள் 'சிலப்பதிகாரமும் மணிமேகலையும்'; இயற்கைத் தவம் 'சிந்தாமணி'; இயற்கைப் பரிணாமம் 'கம்பராமாயணம்'; இயற்கை அன்பு 'பெரிய புராணம்'; இயற்கை இறையருள் 'தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, இன்பத்தமிழ்க் கருவூலங்கள் உன்ன உன்ன உள்ளத்தால் சொல்லால் சொல்ல இயலாது. இத்தகைய சிறப்பினை உள்ளடக்கிய அழகே கல்விக்கு அழகாகும்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பொன்மொழிகள்:**

**கற்ற கல்வியும் பெற்ற செல்வமும் கடைசி மூச்சுவரை பிறருக்குக் கொடுக்கத்தான்:**

'மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்தை வெளிப்படுத்துவதே கல்வி'. கல்வி பயிலும் போது மனத்தைக் குவிய வைக்கும் கூர்மைதான் அறிவு பெட்டகத்தைத் திறக்கும் 'திறவு கோல்'. விவேகானந்தர் தான் கற்ற கல்வியக் கொண்டு உலகம் முழுவதும் நம் நாட்டை அறியும் படிச் செய்தார். பல்லாயிரக்கணக்கான மனிதர்களின் வாழ்வில் ஒளியூட்டியவர். இளைஞர்களின் மனவெழுச்சிகளைத் தட்டியெழுப்பி அவர்களின் கடமை என்ன என்பதை உணரச் செய்தவர். அவர் பெற்ற கல்வி பயனுடையதாக இருந்தது. 'உள்ளூர் மரம் பழுத்தாற் போல' என்பதற்கு ஏற்ப பழங்கள் நிறைந்த மரம் பெரிய மலையில் இருந்தால் அது யாருக்கும் பயன்படாது போகும். ஆனால் அதே பழங்களை உடைய மரம் ஊரின் நடுவில் இருந்தால் எல்லோருக்கும் பயன்படும். அதுபோல சான்றோரிடம் சேரும் செல்வமானது. பிறருக்குப் பயன்படும்படி இருக்கும். அது செல்வத்திற்கே சிறப்பினைத் தரும். பெற்ற கல்வியும் செல்வமும் கடைசி மூச்சி இருக்கும் வரை பிறருக்குக் கொடுத்து உதவுவதற்கே ஆகும்.

**எடுத்தால் குறைவது செல்வம். கொடுத்தால் வளர்வது கல்வி:**

செல்வம் எடுக்க எடுக்கக் குறைந்து விடும். நிலையானது அன்று செல்வத்தின் சிறப்பு அதை வேண்டி நிற்போர்க்குத் கொடுத்து உதவுதல் ஆகும். அதுவே அதன் பயனாகும். கல்வி அறிவு என்பது மனிதனிடம் இயல்பாக இருக்கின்ற ஒன்று எந்த அறிவும் மனிதனுக்கு வெளியிலிருந்து வருவதில்லை. அவை உள்ளேயே இருக்கின்றன. அதை உணர்த்துவதே 'கல்வி'. கல்விச் செல்வம் அழியாத ஒன்று. ஒருவன் கற்றதைப் பிறருக்கு உணர்ந்து கொள்ளும்படி எடுத்துக் கூறும் போது கல்வி அறிவில் தெளிவடைகின்றான். அவனுடைய அறிவும் தூண்டப்படுகிறது. பலவற்றை அறிந்து கொள்கிறான். கல்விச்செல்வம் கொடுக்கக் கொடுக்க நிறையுமே அன்றி குறையாது.

www.Padasalai.Net


இரண்டாம் பருவம்

கவிதைப் பேழை

இயல் 1

# குடும்ப விளக்கு

**நூல் வெளி:**



குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது; கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது; குடும்பம் தொடங்கி உலகினைப் பேணுதல்வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் பெண்ணுக்குக் கல்வி முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகும். இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில், விருந்தோம்பல் தலைப்பிலுள்ள தலைவியின் பேச்சில் இடம்பெற்றுள்ள கவிதைகள் பாடப்பகுதியாக உள்ளன.

பாரதிதாசனின் இயற்பெயர் கனக.சுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதை மீதுகொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவரது படைப்புகள். இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



1. *கல்வி இல்லாத பெண்கள்*
*களர்நிலம் அந்நி லத்தில்*
*புல்விளைந் திடலாம் நல்ல*
*புதல்வர்கள் விளைதல் இல்லை*
*கல்வியை உடைய பெண்கள்*
*திருந்திய கழனி அங்கே*
*நல்லறிவு உடைய மக்கள்*
*விளைவது நவில வோநான்!*

**சொல்லும் பொருளும்:**

களர்நிலம் – உவர்நிலம்

நவிலல் – சொல்லல்

**பாடலின் பொருள்:**

கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் முதலானவைதான் விளையலாம். நல்ல பயிர் விளையாது. அதுபோல அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள். கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர் என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

2. *வானூர்தி செலுத்தல் வைய*
*மாக்கடல் முழுது அளத்தல்*
*ஆனஎச் செயலும் ஆண்பெண்*
*அனைவர்க்கும் பொதுவே! இன்று*
*நானிலம் ஆட வர்கள்*
*ஆணையால் நலிவு அடைந்து*
*போனதால் பெண்களுக்கு*
*விடுதலை போனது அன்றோ!*

**சொல்லும் பொருளும்:**

வையம் – உலகம்

மாக்கடல் – பெரிய கடல்

**பாடலின் பொருள்:**

வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

3. *இந்நாளில் பெண்கட்கு எல்லாம்*
*ஏற்பட்ட பணியை நன்கு*
*பொன்னேபோல் ஒருகை யாலும்*
*விடுதலை பூணும் செய்கை*
*இன்னொரு மலர்க்கை யாலும்*
*இயற்றுக! கல்வி இல்லா*
*மின்னாளை வாழ்வில் என்றும்*
*மின்னாள் என்றே உரைப்பேன்!*

**சொல்லும் பொருளும்:**

இயற்றுக – செய்க

மின்னாளை – மின்னலைப் போன்றவளை

மின்னாள் – ஒளிரமாட்டாள்

**பாடலின் பொருள்:**

இன்று பெண்களுக்கென உள்ள வேலைகளையும், அவர்களின் விடுதலைக்கான செயலையும் பெண்களே செய்தல் வேண்டும். மின்னல்போல் ஒளிரும் இயல்புடையவள் பெண்; ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள் என்றே நான் செல்வேன்.

4. *சமைப்பதும் வீட்டு வேலை*
*சலிப்பின்றிச் செயலும் பெண்கள்*
*தமக்கே ஆம் என்று கூறல்*
*சரியில்லை; ஆடவர்கள்*
*நமக்கும் அப் பணிகள் ஏற்கும்*
*என்றெண்ணும் நன்னாள் காண்போம்!*
*சமைப்பது தாழ்வா? இன்பம்*
*சமைக்கின்றார் சமையல் செய்வார்!*

**பாடலின் பொருள்:**

சமைப்பது, வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது. அவை நமக்கும் உரியவை என்று ஆண்கள் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாளைக் காண்போம். சமைப்பது தாழ்வென எண்ணலாமா? சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றார்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



5. உணவினை ஆக்கல் மக்கட்கு!
    உயிர் ஆக்கல் அன்றோ? வாழ்வு
பணத்தினால் அன்று! வில்வாள்
    படையினால் காண்ப தன்று!
தணலினை அடுப்பில் இட்டுத்
    தாழியில் சுவையை இட்டே
அணித்திருந் திட்டார் உள்ளத்(து)
    அன்பிட்ட உணவால் வாழ்வோம்!



**சொல்லும் பொருளும்:**

தணல் – நெருப்பு
தாழி – சமைக்கும் கலன்
அணித்து – அருகில்

**பாடலின் பொருள்:**

உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். "வாழ்க்கை" என்பது பொருட்செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று. அடுப்பில் உள்ள சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு. அருகில் இருந்து உள்ளத்து அன்போடு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம்பெறுகிறது.

6. சமைப்பது பெண்களுக்குத்
    தவிர்க்கஒணாக் கடமை என்றும்
சமைத்திடும் தொழிலோ, நல்ல
    தாய்மார்க்கே தக்கது என்றும்
தமிழ்த்திரு நாடு தன்னில்
    இருக்குமோர் சட்டந் தன்னை
இமைப் போதில் நீக்கவேண்டில்
    பெண்கல்வி வேண்டும் யாண்டும்!

www.Padasalai.Net

**சொல்லும் பொருளும்:**

தவிர்க்கஒணா – தவிர்க்க இயலாத
யாண்டும் – எப்பொழுதும்

**பாடலின் பொருள்:**

சமைக்கும் பணி பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை எனவும் அப்பணி நல்ல தாய்மார்களுக்கே உரியது எனவும் தமிழ்த்திரு நாட்டில் இருக்கின்ற வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

**இலக்கணக்குறிப்பு:**

| | | |
|---|---|---|
| மாக்கடல் | – | உரிச்சொல்தொடர் |
| ஆக்கல் | – | தொழில்பெயர் |
| பொன்னேபோல் | – | உவம உருபு |
| மலர்க்கை | – | உவமைத்தொகை |
| வில்வாள் | – | உம்மைத்தொகை |
| தவிர்க்கஒணா | – | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

**பகுபத உறுப்பிலக்கணம்:**

1. **விளைவது** = விளை + வ் + அ + து
கொள் – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
அ – சாரியை
து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

2. **சமைக்கின்றார்** = சமை + க் + கின்று + ஆர்
சமை – பகுதி
க் – சந்தி
கின்று – நிகழ்கால இடைநிலை
ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

3. **கொள்வார்** = கொள் + வ் + ஆர்
கொள் – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

புத்தக பக்கம் எண்: 10

www.Padasalai.Net

## கற்பவை கற்றபின்

**1. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்** – பாரதி

**மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்**
**செய்திடல் வேண்டுமம்மா.....** – கவிமணி

**பெண்ணெனில் பேதை என்ற எண்ணம்**
**இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்**
**உருப்படல் என்பது சரிப்படாது** – பாவேந்தர்

இவை போன்ற பெண்மையைப் போற்றும் கவிதை அடிகளைத் திரட்டுக.

பெண்மையைப் போற்றும் கவிதை:

1. கலைத்திறனுக்கோர் மலைச்சிகரம்
தினைப்புனங்காத்த கன்னியொருத்தி தன்
இன்னிசையால் மதகரியையும்
மயங்கி உயங்கச் செய்தாள்.

2. பெண்கட்கு கல்வி வேண்டும்
உலகினைப் பேணுதற்கு
பெண்கட்கு கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கு

3. உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. ஒவ்வொரு உயிர்களுக்கும் உதவ
கடவுள் நேரில் வரமுடியாது – அதனால் தானோ
அவன் செயலைச் செய்ய – அவனால்
அனுப்பப்பட்ட கடவுள் – பெண்

5. பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
– பாரதிதாசன்

6. "வீட்டுக்கு உயிர் வேலி!
வீதிக்கு விளக்குத் தூண்
நாட்டுக்குக் கோட்டை மதில்
நடமாடும் கொடிமரம் நீ"
– தாராபாரதி

**2. ஆணுக்கும் சமையல் செய்யத் தெரிந்திருப்பதன் பயன் குறித்த வகுப்பறையில் கலந்துரையாடி அதன் கருத்துகளைத் தொகுக்க.**

விடை:

ஆயக்கலைகள் அறுபத்து நான்கு அதில் ஒன்று சமையல்கலை. சமையில் என்றால் பெண்கள் தான் என்ற எண்ணம் தொன்று தொட்டே உள்ளது. அதே நேரத்தில் 'நளபாகம்' என்றால் ஆண்கள். ஆண்கள் சமையல் கலையில் வல்லவர்கள் என்பதை 'நளன்' கதையின் மூலம் அறியலாம். பெண்களால் குறைந்த நபர்களுக்கு மட்டுமே சமையல் செய்ய முடியும். ஆனால் ஊருக்கே சமைப்பதற்கு ஆண்களால் மட்டுமே முடியும். அவர்களின் கைவண்ணம் சுவை மிகுந்ததாகவே இருக்கின்றது. சிறிய உணவு விடுதி முதல் மிகப்பெரிய உணவு விடுதி வரை சமைப்பவர்கள் ஆண்களே! "சமையல் கலை" பிரிவில் இளங்கலை, முதுகலை பட்டம் பெற்று வருபவர்கள் அதிகம் ஆண்களே. ஆண்களுக்கும் சமையல் செய்யத் தெரியும். அன்போடு செய்யும் சமையல் ஆண், பெண் வேறுபாடில்லாமல் சுவையாகவே இருக்கும். ஆண்கள் சமைக்கத் தெரிந்திருப்பது சிறப்பானதாகும். குடும்பத்தின் ஒற்றுமைக்கும், மேன்மைக்கும் பயனுடையதாகவே இருக்கும்.

இரண்டாம் பருவம்

கவிதைப் பேழை

இயல் 1

# சிறுபஞ்சமூலம்



**நுழையும் முன்**

மனித வாழ்வைச் செழுமையாக்குபவை அறப் பண்புகளே. காலந்தோறும் தமிழில் அறக் கருத்துகளைக் கூறும் இலக்கியங்கள் தோன்றிவருகின்றன. அவற்றுள் ஒன்றுதான் சிறுபஞ்சமூலம் என்னும் நூல். வயதுக்கும் அறிவுக்கும் சில நேரங்களில் தொடர்பு இருப்பதில்லை. சாதனைக்கு வயது ஒரு தடையில்லை.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நூல் வெளி:**



தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண்கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன. இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர். காரி என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்தபெயர். மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.

**அறிவுடையார் தாமே உணர்வர்**

***பூவாது காய்க்கும் மரம்உள; நன்று அறிவார்,***
***மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,***
***விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு***
***உரையாமை செல்லும் உணர்வு.*** *(பா.எண்.22)*

**பாடலின் பொருள்:**

பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு. இதைப் போலவே நன்மை, தீமைகளை நன்குணர்ந்தவர், வயதில் இளையவராக இருந்தாலும், அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவார். பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்து கொள்வர்.

**அணி:**

பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

**சொல்லும் பொருளும்:**

மூவாது – முதுமை அடையாமல்
நாறுவ – முளைப்ப
தாவா – கெடாதிருத்தல்

**இலக்கணக் குறிப்பு:**

அறிவார், வல்லார் – வினையாலணையும் பெயர்கள்
விதையாமை, உரையாமை – எதிர்மறைத் தொழிற்பெயர்கள்
தாவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம்:**

1. **உரையாமை** = உரை + ய் + ஆ + மை
உரை – பகுதி
ய் – சந்தி (உடம்படுமெய்)
ஆ – எதிர்மறை இடைநிலை
மை – தொழிற்பெயர் விகுதி

2. **காய்க்கும்** = காய் + க் + க் + உம்
காய் – பகுதி
க் – சந்தி
க் – எதிர்கால இடைநிலை
உம் – பெயரெச்ச விகுதி

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**தெரியுமா?**

சிறுபஞ்சமூலத்தின் பாடலில் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அது போல, ஒரு பாடலில் மூன்று, ஆறு கருத்துகளைக் கொண்ட அறநூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் அமைந்துள்ளன. அந்நூல்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

## அறிந்து தெளிவோம்

**சாதனைக்கு வயது தடையன்று**

- 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும், பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.
- 11ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும்ப பட்டம் பெற்றவர் பாரதியார்.
- 15ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.
- 16ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்.
- 17ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் விஞ்ஞானி கலீலியோ.

www.Padasalai.Net

புத்தக பக்கம் எண்: 12

## கற்பவை கற்றபின்

**1. பூக்காமலே காய்க்கும் மரங்கள், விதைக்காமலே முளைக்கும் விதைகள் எவையெனக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக.**

விடை:

**பூவாது காய்க்கும் மரங்கள்:**

வேங்கைமரம், அவகோசிமரம் கோளி, கோளிகம், ஆடலை, ஆண்டலை, கடகம், பூவாமரம், புட்பசூனியம், அத்தி, மரம், ஆல மரம், அரச மரம்.

பலா மரம், அன்னாசி மரம் இந்த மரங்கள் பூவாது காய்க்கும் மரங்கள் ஆகும்.

*"செண்பகமும், வேங்கையும் வண்டு*
*வாரா மலர் மரம்"*

**விதைக்காமலே முளைக்கும் விதைகள்:**

எங்கும் மரங்கள்! விதை போட்டது யார்? தெரியாது. காடுகள், மலைகள், தெரு ஓரங்கள் ஆற்றல் கரை ஓரங்கள் எல்லா இடங்களிலும் வளர்ந்து இருக்கும் மரங்கள் கோங்கு – காடு, ஆற்றங்கரை சந்தன மரம் – மலைக்காடுகளில் எல்லாம் விதைக்காமலே முளைக்கின்றன மரங்கள் ஆகும். புங்கை, கோங்கு, சந்தனம், வேம்பு, மா, புளி, ஆல், அரசு, சந்தனம் போன்ற மரங்கள் வளர்கின்றன. பெரிய பெரிய காடுகளிலும் மற்றும் எல்லா இடங்களிலும் வளரும் மரங்கள் விதைக்காமலே முளைக்கும் விதைகள் தான்.

**"முளைக்கும் விதை பென்சில்"**

மரம் வளர்ப்பை அடுத்த தலை முறைக்குச் சொல்லித் தரும் முயற்சி. அடுத்த தலைமுறைக்கு உணவு ஊட்டுவது போல, அடுத்த தலைமுறையினரிடம் உணர்வோடு இந்த முளைக்கும் விதை

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பென்சிலை அறிமுகப்படுத்த வேண்டும். (ஃபார்ம்சில்ஸ்) (Farmcil pencils) சிறுவர்கள் விளையாட்டாக செய்யும் முயற்சி. ஒரு செடி உயிர் பெறும் போது பல செடிகளை ஆர்வமுடன் வளர்க்கத் தூண்டும்.

ஏற்கனவே அமெரிக்கா, ஐரோப்பா போன்ற வெளிநாடுகளால் இந்த பென்சில் மரம் வளர்த்தல் வெற்றியடைந்துள்ளது. இந்தியாவையும் பசுமையாக மாற்றுவோம்.

**2. மூவாது மூத்தவர், காணாது கண்டவர்**
**இவை போல நயம் அமைந்த தொடர்களை உருவாக்குக.**


வராது வந்தவர்
போனால் வராது
வந்தால் போகாது
கேளாது கெட்டவர்
சொல்லாமல் சொன்னவர்
மூவாத முதல்வர்
செல்லாச் செல்வம்
காணாக்கண்

இரண்டாம் பருவம்



விரிவானம்

# இயல் 1 வீட்டிற்கோர் புத்தகசாலை



**நுழையும் முன்**

'நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கிவந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்' என்பார் ஆபிரகாம் லிங்கன். மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது சிரிப்பு மட்டுமன்று, சிந்திப்பதும்தான். சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமன்று, நூல்களும்தான். உலகமெங்கும் பயணம் செல்லும் பட்டறிவை நூலுலகம் தருகிறது. நல்ல நண்பனைப் போன்ற நூலையும், நல்ல நூலைப் போன்ற நண்பனையும் தேடிப் பெறவேண்டும். இசையைப் போன்றே இதயத்தைப் பண்படுத்துவன நூல்களே. ஆதலின் வீட்டிற்கோர் புத்தகசாலை என்றும் தேவை.

**நூல் வெளி:**



பேரறிஞர் அண்ணா தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கியவர். எழுத்தாளரான அண்ணாவைத் 'தென்னகத்துப் பெர்னாட்ஷா' என்று அழைத்தனர். சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் முதல் இன்பஒளி வரை பல படைப்புகளைத் தந்தவர். அவரது பல படைப்புகள் திரைப்படங்களாயின. தம்முடைய திராவிட சீர்திருத்தக் கருத்துகளை நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக முதன்முதலில் பரப்பியவர் இவரே. 1935 இல் சென்னை, பெத்தநாயக்கன் பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார். ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம்நாடு, திராவிடநாடு, மாலைமணி, காஞ்சி போன்ற இதழ்களில் ஆசிரியராகவும் குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் இருந்தார். முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார். சென்னை மாகாணத்தைத் 'தமிழ்நாடு' என்று மாற்றித் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**தெரியுமா?**

2009 ஆம் ஆண்டு நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது. 2010 ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

## தெரிந்து தெளிவோம்

**புகழுக்குரிய நூலகம்**

- ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம்.
- உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.
- இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது. திருவனந்தபுரம் நடுவண் நூலகம்.
- கல்கத்தாவில் 1836 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1953இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப் பெரிய நூலகமாகும். இது ஆவணக் காப்பக நூலகமாகவும் திகழ்கிறது.
- உலகின் மிகப் பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.

www.Padasalai.Net

**புத்தக பக்கம் எண்: 16**

## கற்பவை கற்றபின்

**1. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்படவேண்டும்! – அறிஞர் அண்ணா**

**உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே! - கதே**

**இவை போன்ற பொன்மொழிகளை எழுதி வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

விடை:

1. "ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்
   நூலகம் இல்லா ஊருக்கு அறிவு பாழ்"
2. பள்ளி என்பது பாடநூல்களைக் கொண்டு
   அறிவை விதைக்கும் கனம் –
   நூலகமே அந்த அறிவை வளர்த்துச்
   செம்மைப்படுத்தும் களம்
3. "நூல் பல கல்! நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு
   – ஔவையார்
4. "நூல்கள் நமக்கு நல்ல நண்பர்கள்"
5. நூல்கள் இல்லாத வீடு உயிரற்ற உடலாகும்

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. சீர்காழி இரா.அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் ஒன்பதாம் நாள், தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுவதன் காரணத்தை அறிக.**

விடை:

சீர்காழி இரா.அரங்கநாதன் 'இந்திய நூலகத் தந்தை' எனப் போற்றப்படுகிறார். நூலகவியலின் ஐந்து விதிகளை அறிமுகம் செய்தார். நூலகவியலுக்குச் செய்த பங்களிப்புக்காக இந்திய அரசு 'பத்மஸ்ரீ' விருது வழங்கி சிறப்பித்துள்ளது. இவரது பிறந்த நாளை இந்தியாவின் "தேசிய நூலக தினமாகவும்" அறிவித்துள்ளது. இவர் இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நூலகராகவும் நூலகத்துறைப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். நூலகவியலின் உயர் பட்டங்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இந்திய நூலகவியல் பள்ளியில் பணியாற்றினார். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு நூலகவியல் சார்ந்த உயர் தொழிற் கழகங்களில் உறுப்பினராக உயர் பதவிகளையும் வகித்துள்ளார். இவரே "இந்திய நூலகவியலின் தந்தை" எனப் போற்றப்படுகிறார்.

**3. நூலகத்தில் கவிதை, கதை முதலிய நூல்களை நூலாசிரியர் வரிசையிலும் நூலின் அடையாளக் குறியீட்டு எண் அடிப்படையிலும் எவ்வாறு தேடுவது என்பதைத் தெரிந்துகொள்க.**

விடை:

ஆயிரக்கணக்கான நூல்களை ஒழுங்குபடுத்தி, வகைப்படுத்தி மக்கள் எளிதில் படிப்பதற்காக அமைக்கப்பட்டதே 'நூலகம்'. நூலகத்தில் மொழி இலக்கியம், கணிதம், அறிவியல் வரலாறு, மருத்துவம், பொறியியல், சமயம் சார்பான நூல்கள் துறை வாரியாக இடம் பெற்றிருக்கும். ஆசிரியர் பெயர் பட்டியல், நூலின் பெயர் பட்டியல், பொருள் விளக்கப் பெயர் பட்டியல், கவிதை, நூல்கள், என நூற்பட்டியல் தயாரித்து வைத்துள்ளது. நமக்குத் தேவையான நூலைத் தேர்ந்து எடுக்க, நூலின் பெயர், ஆசிரியர் பெயர், நூல் என்ன துறையைச் சார்ந்தது என்பதற்கு ஏற்ப பட்டியலில் தேர்ந்து எடுத்து படிக்க வேண்டும். தற்போது மின்னணுக் காலமான இக்காலத்தில் நூலகங்களில் உள்ள நூல்கள் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளன. இணையத்தள நூலகம், குறுவட்டுகள், மின்னணு ஒளிவட்டு, நுண்சுருள் முதலிய வடிவங்களில் நூல்கள் உருமாற்றம் பெற்று நூலகப் பயன்பாட்டில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இரண்டாம் பருவம்

கற்கண்டு

இயல் 1

# இடைச்சொல் – உரிச்சொல்

## இடைச்சொற்களின் வகைகள்

| | |
|---|---|
| வேற்றுமை உருபுகள் | ஐ, ஆல், கு, இன், அது, கண் |
| பன்மை விகுதிகள் | கள், மார் |
| திணை, பால் விகுதிகள் | ஏன், ஓம், ஆய், ஈர்(கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, அ |
| கால இடைநிலைகள் | கிறு, கின்று...... |
| பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் | அ, உ, இ, மல்..... |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தொழிற்பெயர் விகுதிகள் | தல், அம், மை |
| வியங்கோள் விகுதிகள் | க, இய |
| சாரியைகள் | அத்து, அற்று, அம்...... |
| உவம உருபுகள் | போல, விட, காட்டிலும், மாதிரி |
| இணைப்பிடைச் சொற்கள் | உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்...... |
| தத்தம் பொருள் உணர்த்தும் இடைச் சொற்கள் | உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் |
| சொல்லுருபுகள் | மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை |
| வினா உருபுகள் | ஆ, ஓ |

## தெரிந்து தெளிவோம்

அன்று என்பது ஒருமைக்கும் அல்ல என்பது பன்மைக்கும் உரியன.
(எ.கா.) இது பழம் அன்று.
இவை பழங்கள் அல்ல.

எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்.

எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும்.

(எ.கா.) எத்தனை நூல்கள் வேண்டும்?

எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது.

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## உரிச்சொற்கள்

**ஒரு சொல் பல பொருளுக்கு உரியது.**

கடி மலர் – மணம் மிக்க மலர்

கடி நகர் – காவல் மிக்க நகர்

கடி விடுதும் – விரைவாக விடுவோம்

கடி நுனி – கூர்மையான நுனி

**பல சொல் ஒரு பொருள்:**

உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.

உறு பசி; தவச் சிறிது; நனி நன்று

புத்தக பக்கம் எண்: 20

### கற்பவை கற்றபின்

**1. பத்தியில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

**அ) பெண்ணடிமை போகவேண்டும்; பெண், கல்வி பெறவேண்டும். பெண்கள் படித்தால்தான் தம் சொந்தக் காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.**

**இடைச்சொற்கள்:**

படித்தால் **தான்** (தான்), நிற்கலா**ம்** (ஆம்), கற்**றால்** (ஆல்), வீடு**ம்** நாடு**ம்** (உம்), பெண்களுக்**கும்** (உம்) உரிமைக**ளும்** (உம்)

**ஆ) நமது முன் சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம், ஏட்டு எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் உலகம். மனவளத்தை அதிகப்படுத்தும் வழிகள் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.**

**இடைச்சொற்கள்:**

| | | |
|---|---|---|
| சந்ததியர்களுக்கு (கு) | இருந்ததை விட (விட) | நமக்கு (கு) |
| அவர்களின் (இன்) | பர்ணசாலைக்குப் (கு) | ஆலமரத்தடியில் (இல்) |
| அமர்ந்திருக்க (இருந்து) | காலைக்கடன்களை (ஐ) | முடித்துக்கொண்டு (கொண்டு) |
| பாடங்களை (ஐ) | ஏடும் எழுத்தாணியும் (உம்) | உலகை (கை) |
| வீட்டுக்கு காட்டக்கூடிய (கூடிய) | பாராளும் (உம்) | இருந்ததைவிட (விட) |

**2. உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.**

**ஓ** - தமிழ்மொழியை அதன் வழிமொழிகளோடு வகைப்படுத்தலா**மோ**?

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**ஏ** - "கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளிமழை**யே** கவிதை" என்றார் கீட்ஸ்.

**தான்** - கயல்விழி**தான்** கவிதைப் போட்டியில் பரிசு பெற்றான்.

**மட்டும்** - பணம் **மட்டும்** இருந்தால் போதாது. நல்ல குணமும் வேண்டும்.

**ஆவது** - உயரம் தாண்டுதல் போட்டியில் முதலா**வது** இடம் பிடித்த மேரி பரிசு பெற்றாள்.

**கூட** - அரசர்கள் **கூட** எத்தகைய வேறுபாடும் கருதாமல் கற்றவர்களைத் தமக்கு ஆசிரியர்களாகக் கருதினார்கள்.

**ஆ** - நேற்று பள்ளிக்கு விடுமுறை**யா**?

**ஆம்** - அவரவர் தத்தம் தாய்மொழியைப் போற்றி வர**லாம்**.

**3. பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக.**

**அ) மணற்கேணி_ _ப்போல் விளங்கும் நூல் _ _ உறுதுணை _ _ இருக்கிறது.**
மணற்கேணி**யை**ப்போல் விளங்கும் நூல் மிக்க உறுதுணை**யாய்** இருக்கிறது.

**ஆ) பெண்கள் _ _ படிக்க வைக்காத காலத்தில் _ _ பெண் இனம் _ _ பெருமை சேர்க்கும்படி _ _ நம் முத்துலெட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவர் _ _ வந்தார்கள்.**
பெண்**களை**ப் படிக்க வைக்காத காலத்திலும் கூட பெண் இனத்திற்கே பெருமை சேர்க்கும் படி**யாக** நம் முத்துலெட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவராக வந்தார்கள்.

**இ) மக்கள்_ _ மனம்_ _ உலக அறிவுபுக வழிசெய்ய வேண்டும்.**
மக்க**ளின்** மனத்**தில்** உலக அறிவுபுக வழிசெய்ய வேண்டும்.

**4. இணைத்து எழுதிப் பாருங்கள்.**

| | | |
|---|---|---|
| அவன் | தான்<br>உம்<br>ஏ<br>ஆ | மனிதன் |
| இயற்கை | | அழகு |

1. அவன் தான் மனிதன்.
2. அவனும் மனிதன்.
3. அவன் தான் அழகு.
4. அவனும் அழகு
5. அவனே அழகு.
6. அவனா அழகு

1. இயற்கை தான் அழகு.
2. இயற்கையும் அழகு.
3. இயற்கையே அழகு.
4. இயற்கையா அழகு.

| | | |
|---|---|---|
| உனக்கு | மட்டும்<br>கூட<br>ஆவது | தெரியுமா? |
| | | தெரியும் |

1. உனக்கு மட்டும் தெரியுமா?
2. உனக்குக் கூட தெரியுமா?
3. உனக்காவது தெரியுமா?

| | | |
|---|---|---|
| வீடு, நாடு | உம்<br>ஓ | நமதே |
| காற்று, வெளிச்சம் | | தேவை |
| அன்பு, அமைதி | | வேண்டும் |
| வான்மதி, பானு | | வாருங்கள் |

1. வீடும் நாடும் நமதே.
2. காற்றும் வெளிச்சமும் தேவை.
3. அன்பும் அமைதியும் வேண்டும்.
4. வான்மதியும் பானுவும் வாருங்கள்.
5. வான்மதியோ பானுவோ வாருங்கள்.

www.Padasalai.Net
http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

**5. பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.**

அ) **மா**பெரும் பொதுக் கூட்டம் (கடி, மா)

ஆ) **கடி**விடுதும் (உறு, கடி)

இ) **தவ**நுதல் (வாள், தவ)

ஈ) **சாலச்** சிறந்தது (சால, மழ)

உ) **கடி**மனை (கடி, தட)

**சிந்தனை வினா.**

**1) "தான்" என்னும் இடைச்சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?**

'தான்' என்னும் இடைச்சொல் எந்தச் சொல்லுடன் வருகிறதோ அச்சொல்லையே முதன்மைப்படுத்துகின்றது.

1. கதிரவன்**தான்** நேற்று பரிசு பெற்றான்.
   இத்தொடரில் கதிரவன் – 'பெயரை' முதன்மைப்படுத்துகிறது.
2. கதிரவன் நேற்று**தான்** பரிசு பெற்றான்.
   இத்தொடரில் நேற்றுதான் 'காலத்தை' முதன்மைப்படுத்துகின்றது.

**2) அவர்களுக்குப் பரிசு தருவேன் - இத்தொடரில் "ஆ" என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க.**

1) அவர்களுக்குப் பரிசு தருவேனா?
2) அவர்களுக்கா பரிசு தருவேன்?

www.Padasalai.Net

**3) செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம்பெறுகின்றன?**

**உரிச்சொல்:** பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றின் தன்மையை விளக்குவது 'உரிச்சொல்' எனப்படும். உரிச்சொல் செய்யுளுக்கே உரிமை பெற்று வரும். உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த தனித்த பொருள் உடையவை. ஆனால் உரிச்சொற்கள் தனித்து வழங்கப்படுவதில்லை.

**செய்யுளில் உரிச்சொற்கள் பெரும் இடம்:**

உரிச்சொற்கள் ஒரு சொல் பல பொருளுக்கு உரியது. கடி – என்ற ஒரு சொல் பல பொருள்களில் வரும்.

கடி → மலர், நகர், நுனி

1. சோலையில் கடிமலர் உள்ளன.
2. மதுரை சதுக்க பூதங்கள் சூழ்ந்த கடிநகர்.
3. வாள் முனையை விட கடிநுனி எழுதுகோல்.

பல சொல் குறித்த ஒரு பொருளில் வரும் உரிச்சொற்கள். மிகுதி என்னும் பொருளில் வரும் உரிச்சொற்கள்.

மிகுதி → உறு, தவ, நனி

1. உறுபசி 2. தவச்சிறிது 3. நனி நன்று

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**4) தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.**

உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன.

1. ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு.
2. பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு.

மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது. விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது. பிற உரிச்சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.

**5) 'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் எப்படி வரும் என்பதை எழுதுக.**

'ஆ' வினாப் பொருளில் வரும் இடைச்சொல்லாகும். ஒரு வாக்கியத்தில் எந்தச் சொல்லுடன் 'ஆ' இடைச்சொல் இணைந்து வருகிறதோ அது வினாவாகும்.

சிவநேசன் நேற்றுச் சென்னைக்குப் போனா**னா**?

சிவநேசன் நேற்றுச் சென்னைக்**கா** போனான்?

சிவநேசன் நேற்**றா** சென்னைக்குப் போனான்?

சிவநேச**னா** நேற்றுச் சென்னைக்கு போனான்?

www.Padasalai.Net

**6) இடைச் சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.**

**அ) விட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?**
வீட்டிற்கும் செல்ல இவ்வளவு பீடிகையா?

**ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.**
இந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டும்.
இந்தச் சூழ்நிலையையும் மாற்ற வேண்டும்.

**இ) வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை.**
வானூர்தியைச செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானவை.

வானூர்தியைச் செலுத்துதலும், உலகையும் கடலையும் அளத்தல் ஆகிய எல்லாச் செயலும் ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானவையாகும்.

**ஈ) சமைப்பது தாழ்வென எண்ணலாமா?**
சமைப்பது தாழ்வாகுமா?

**உ) பூக்காமலே சில மரங்களில் காய்ப்பதுண்டு.**
பூக்காமலே காய்க்கும் மரங்களும் உண்டு.

**ஊ) வாளால் வெட்டினான்.**
வாளால்தான் வெட்டினான். (அ) வாளால் வெட்டினானா?

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

## பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| பகுதி (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| விகுதி (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டும். |
| இடைநிலை | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| சந்தி | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| சாரியை | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| விகாரம் | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

**பகுதி:**

ஊரன் – ஊர், வரைந்தான் – வரை
நடிகன் – நடி, மடித்தார் – மடி
பார்த்தான் – பார் மகிழ்ந்தாள் – மகிழ்

www.Padasalai.Net

**விகுதி:**

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், அள் |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ – வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு... |

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**இடைநிலைகள்:**

| | | |
|---|---|---|
| வென்றார் | ற் – இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் – எதிர்கால இடைநிலைகள் | ப், வ், க் |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் – பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

**சந்தி:**

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் – சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் – உடம்படுமெய் சந்தி | ய், வ் |

**சாரியை:**

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

www.Padasalai.Net

## மதிப்பீடு

## பலவுள் தெரிக

1. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) சிறுபஞ்சமூலம் – 1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்ப விளக்கு – 2. சங்க இலக்கியம்
இ) சீவகசிந்தாமணி – 3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை – 4. தற்கால இலக்கியம்

i) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 ii) அ-2, ஆ-3, இ-1, ஈ-4
iii) அ-3, ஆ-1, இ-4, ஈ-2 iv) அ-4, ஆ-1, இ-2, ஈ-3

**விடை: i) அ-3, ஆ-4, இ-1, ஈ-2**

2. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.

அ) கலைக்கூடம், திரையரங்கம், ஆடுகளம், அருங்காட்சியம்
ஆ) கடி, உறு, கூர், கழி
இ) வினவினான், செப்பினான், உரைத்தான், பகன்றான்
ஈ) இன், கூட, கிறு, அம்பு

**விடை: ஈ) இன், கூட, கிறு, அம்பு**

3. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?
இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!
ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

**விடை: இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!**

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

4. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை
ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.
இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்
i) ஆ, இ சரி; அ தவறு ii) அ, இ, சரி; ஆ தவறு
iii) மூன்றும் சரி iv) மூன்றும் தவறு
விடை: iii) மூன்றும் சரி

5. **பூவாது** காய்க்கும், **மலர்க்கை** – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
விடை: ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

## கூடுதல் வினாக்கள்

1. பொருத்தமான விடையைத் தேர்க.
அ) மணிமேகலை – 1. நாச்சியார் திருமொழி
ஆ) ஔவையார் – 2. தூது சென்ற பெண்பாற் புலவர்
இ) காரைக்கால் அம்மையார் – 3. பக்தி இலக்கியம்
ஈ) ஆண்டாள் – 4. மாதவிமகள்
i) அ–1, ஆ–3, இ–4, ஈ–2 ii) அ–4, ஆ–2, இ–3, ஈ–1
iii) அ–4, ஆ–3, இ–1, ஈ–2 iv) அ–4, ஆ–1, இ–3, ஈ–2
விடை: ii) அ-4, ஆ-2, இ-3, ஈ-1

2. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
அ) மாதவி மகள் மணிமேகலை கல்வி கற்ற பெண்ணாக இருந்தாள்
ஆ) தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் – முத்துலெட்சுமி
இ) முத்துலெட்சுமி அவர்கள் சென்னை மாநகராட்சியின் முதல் மேயர்
ஈ) பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை திருமொவெண – பாரதியார் கூற்று
i) கூற்று அ, ஆ சரி; இ, ஈ, தவறு ii) கூற்று அ, ஆ, இ சரி; ஈ தவறு
iii) கூற்று அ, ஈ, சரி; ஆ, இ தவறு iv) கூற்று அ, ஆ தவறு; இ, ஈ சரி
விடை: i) கூற்று அ, ஆ சரி; இ, ஈ, தவறு

3. பெண் கல்விக்கு முதன் முதலில் பரிந்துரை செய்த குழு
அ) உட்ஸ் அறிக்கை ஆ) சர்வசிக்ஷ அபியான்
இ) ஹண்டர் குழு ஈ) சார்லஸ் உட்ஸ் அறிக்கை
விடை: இ) ஹண்டர் குழு

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) மூவலூர் இராமாமிர்தம் – 1. முதல் பெண் ஆசிரியர்
ஆ) ஐடாய் சோபியா ஸ்கட்டர் – 2. திருமண உதவித்தொகை
இ) பண்டித ரமாபாய் – 3. வேலூரில் இலவச மருத்துவம்
ஈ) சாவித்ரி பூலே – 4. பண்டிதர்

i) அ–3, ஆ–2, இ–4, ஈ–1 ii) அ–1, ஆ–2, இ–3, ஈ–4
iii) அ–2, ஆ–3, இ–4, ஈ–1 iv) அ–3, ஆ–2, இ–1, ஈ–4

**விடை: iii) அ-2, ஆ-3, இ-4, ஈ-1**

5. இந்தியாவில் குழந்தையைப் பாதுகாப்போம் என்ற அமைப்பை நிறுவி நோபல் பரிசு பெற்றவர்

அ) மலாலா ஆ) சாவித்திரி பூலே
இ) மருத்துவர் முத்துலெட்சுமி ஈ) கைலாஷ் சத்யார்த்தி

**விடை: ஈ) கைலாஷ் சத்யார்த்தி**

6. பெண்கல்விக்காக போராடி நோபல் பரிசு பெற்ற வீரச்சிறுமி __________ ஆவார்.

அ) மலாலா ஆ) பண்டித ரமாபாய்
இ) ஸ்கட்டர் ஈ) ஜோதிராவ் பூலே

**விடை: அ) மலாலா**

www.Padasalai.Net

7. பொருந்தாததை எடுத்து எழுதுக.

அ) கோத்தாரிக் கல்விக்குழு – 1. 1964
ஆ) சாரதா சட்டம் – 2. 1929
இ) ஹண்டர் குழு – 3. 1882
ஈ) அவ்வை இல்லம் – 4. 1925

**விடை: ஈ) அவ்வை இல்லம் - 4. 1925**

8. பாரதிதாசனின் __________ நூல் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

அ) குடும்ப விளக்கு ஆ) பாண்டியன் பரிசு
இ) பிசிராந்தையார் ஈ) தமிழியக்கம்

**விடை: இ) பிசிராந்தையார்**

9. “பிசிராந்தையார்” நூல் எவ்வகையைச் சார்ந்த நூல்?

அ) நாடகம் ஆ) உரைநடை இ) கவிதை ஈ) கட்டுரை

**விடை: இ) பிசிராந்தையார்**

10. வில்வாள் __________ இலக்கணக்குறிப்பு தருக.

அ) உவமைத் தொகை ஆ) உம்மைத் தொகை
இ) வினைத்தொகை ஈ) உருவகம்

**விடை: ஆ) உம்மைத் தொகை**

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



11. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) களர்நிலம் – 1. முதுமை அடையாமல்

ஆ) மின்னாள் – 2. உவர் நிலம்

இ) மூவாது – 3. உலகம்

ஈ) வையம் – 4. ஒளிர மாட்டாள்

i) அ–4, ஆ–1, இ–2, ஈ–3 ii) அ–2, ஆ–4, இ–1, ஈ–3

iii) அ–4, ஆ–1, இ–3, ஈ–2 iv) அ–1, ஆ–2, இ–4, ஈ–3

**விடை: ii) அ-2, ஆ-4, இ-1, ஈ-3**

12. பொருந்தாதை எடுத்து எழுதுக.

அ) வல்லார் – வினையாலணையும் பெயர்

ஆ) தாவா – ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

இ) ஆக்கல் – வினைத்தொகை

ஈ) மாக்கடல் – உரிச்சொல் தொடர்

**விடை: இ) ஆக்கல் - வினைத்தொகை**

13. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் ___________

அ) நல்லாதனார் ஆ) காரியாசன்

இ) முன்றுரையரையனார் ஈ) பொய்கையார்

**விடை: ஆ) காரியாசன்**

www.Padasalai.Net

14. ஆறு கருத்தக்களைக் கொண்ட நூல் ___________ ஆகும்.

அ) சிறுபஞ்சமூலம் ஆ) திரிகடுகம்

இ) ஏலாதி ஈ) நான்மணிக்கடிகை

**விடை: இ) ஏலாதி**

15. வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும் என்று கூறியவர் ___________

அ) ஆபிரகாம் லிங்கன் ஆ) அண்ணா இ) பாரதிதாசன் ஈ) பாரதி

**விடை: ஆ) அண்ணா**

16. தென்னகத்தின் பெர்னாட்ஷா – என்று அழைக்கப்பட்டவர் ___________ ஆவார்.

அ) அண்ணா ஆ) காந்தி

இ) சீர்காழி இரா.அரங்கநாதன் ஈ) காமராஜர்

**விடை: அ) அண்ணா**

17 பொருத்தமான விடையைத் தேர்க.

அ) தஞ்சை சரசுவதி மகால் – 1. அமெரிக்கா

ஆ) கன்னிமாரா நூலகம் – 2. பழைமையான நூலகம்

இ) ஆவணக் காப்பகம் – 3. தமிழ்நூல்கள் அதிகம்

ஈ) லைப்ரரி ஆப் காங்கிரஸ் – 4. கல்கத்தா நூலகம்

i) அ–3, ஆ–4, இ–1, ஈ–2 ii) அ–2, ஆ–3, இ–4, ஈ–1

iii) அ–1, ஆ–2, இ–3, ஈ–4 iv) அ–3, ஆ–2, இ–1, ஈ–4

**விடை: ii) அ-2, ஆ-3, இ-4, ஈ-1**

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
அ) இது பழம் அல்ல
ஆ) இது பழம் அன்று – இக்கூற்றுகள் சரியா? தவறா? சுட்டுக.
i) கூற்று அ, ஆ சரி; ii) அ சரி; ஆ தவறு
iii) இரண்டும் தவறு iv) அ தவறு; அ சரி
**விடை: iii) இரண்டும் தவறு**

19. ஒரு சொல் பல பொருள்களுக்குரிய உரிச்சொற்களுக்கு எடுத்துக்காட்டு தருக.
கடி – கடிமலர், கடிநகர், கடிநுனி

20. பல சொல் ஒரு பொருளுக்குரிய உரிச்சொற்களுக்கு எடுத்துக்காட்டு தருக.
உறுபசி, தவச்சிறிது, நனிநன்று
உறு, பசி, தவ, நனி – மிகுதி என்னும் பொருளில் வரும்.

## குறுவினா

**1. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?**
தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடு பொருள் “விருந்தோம்பல்” ஆகும்.

**2. மூவாது மூத்தவர், நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.**
**மூவாது மூத்தவர்:**
பூக்காமலே சில மரங்கள் காய்ப்பது உண்டு. இதைப் போல நன்மை, தீமைகளை நனகு உணர்ந்தவர், வயதில் இளமையாக இருந்தாலும் அவர் மூத்தவரோடு ஒப்பிட்டு எண்ணத்தக்கவர். அவரே மூவாது மூத்தவர் ஆவார்.
**நூல் வல்லார்:**
பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்து கொள்ளும் வல்லார் ஆவார்.

**3. நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?**
நான் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள்:
1. தெனாலிராமன் கதைகள்
2. சிறுவர் மலர்
3. அறிவியல் சிந்தனை நூல்கள்
4. திருக்குறள் – உரைநூல்
5. அப்துல் கலாம் – அக்னிச் சிறகுகள்

**4. சாரதா சட்டம் எதற்காகப் போடப்பட்டது?**
- 1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டுவரப்பட்டது.
- பெண் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம் அதைத் தடுக்கவே சாரதா திட்டம் கொண்டுவரப்பட்டது.

## கூடுதல் வினாக்கள்

**1. பக்தி இயக்கக்காலத்தில் இறைவனுக்குப் பாமாலை கட்டிய பெண்கள் இருவர்ப் பெயரை எழுதுக.**
பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் இருவரும் இறைவனுக்குப் பாமாலை கட்டியவர்கள்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. பெண்மை புரட்சி - மருத்துவர் முத்து லெட்சுமியின் சாதனைகள் இரண்டை கூறுக.**

- தமிழகத்தில் முதல் பெண் மருத்துவர்.
- இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

**3. மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் சமூகப்பணியைக் கூறுக.**

தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர். தமிழக அரசு 8ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவிக் தொகையை மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் பெயரில் வழங்கிவருகிறது.

**4. நாட்டின் முதல் பெண் ஆசிரியர் - குறிப்பு வரைக.**

நாட்டில் முதல் பெண் ஆசிரியர் சாவித்ரி பூலே. 1848இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

**5. கோத்தாரி கல்விக் குழு - சிறுகுறிப்பு வரைக.**

1964 ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

**6. கல்வி குறித்த சிறப்புத் தொடர் இரண்டினை எழுதுக.**

- கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
- கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி

www.Padasalai.Net

**7. ஒளிரும் இயல்புடையவர் யார்? ஒளிரா இயல்புடையவர் யார்?**

மின்னல்பேல் ஒளிரும் இயல்புடையவள் பெண்; ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள்.

## சிறுவினா

**1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக?**

**சங்காலப் பெண்பாற் புலவர்கள்:**

- ஔவையார்
- ஒக்கூர் மாசாத்தியார்
- ஆதிமந்தியார்
- வெண்ணிக் குயத்தியார்
- பெண் முடியார்
- அள்ளூர் நன்முயையார்
- நக்கண்ணையார்
- காக்கைப் பாடினியார்
- வெள்ளி வீதியார்
- காவற்பெண்டு
- நப்பசலையார்

**2. சமைப்பது தாழ்வா? இன்பம்**
**சமைக்கின்றார் சமையல் செய்வார்.**

**அ) இன்பம் சமைப்பவர் யார்?**

இன்பம் சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கு மேலாக இன்பத்தையும் அன்பையும் சேர்த்தே சமைக்கின்றனர்.

**ஆ) பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?**

சமைப்பது தாழ்வு என்று எண்ணுவது கூடாது. சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கு மேலாக இன்பத்தையும் படைக்கின்றார். மேலும் உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். 'வாழ்க்கை' என்பது பொருளினாலும் வீரத்தாலும் அமைவது இல்லை. சமைக்கும் சுவையோடு சேர்த்து செய்வது மட்டுமல்லாமல் அன்பும் சேர்த்து பரிமாறும் போது தான் வாழ்க்கை நலம் பெறுகிறது என்கிறார் பாவேந்தர்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. விதைக்காமலே முளைக்கும் விதைகள் - இத்தொடரின்வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.**

பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்வர்.

**4. இன்றைய பெண்கல்வி என்றும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.**

தந்தனத் தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட ஆமா…………வில்லினில் பாட
வந்தருள்வாய் தமிழ் மகளே……..
பட்டி தொட்டி மக்களெல்லாம்
கேட்டுப் பாடும் வில்லுப்பாட்டு
நாட்டிலையும் நல்ல நாடு
நாவலர்கள் புகழும் நாடு
இயற்கைச் செல்வம் மிகுந்தநாடு
பெண்மை போற்றும் நம்ம நாடு
நதிகள் என்றால் பெண்கள் தானே

வாழும் பூமியும் பெண்மை தானே
அன்பு காட்ட அன்னையவள்
பாசம் காட்ட பாவையவள்
வீட்டைப் போற்றும் தெய்வம் அவள்
நாட்டைக் காக்கும் அரணும் அவள்
பெண்கள் கல்வி கற்றுத் தானே
துறைகள் எல்லாம் ஆளும் பெண்கள் – (2)
ஆண்கள் கல்வி கற்றால்; வீடு, மட்டும் தானே
பெண்களோ கல்வி கற்றால் நாடும் சேர்ந்தும் வாழுமே
விண்ணும் மண்ணும் அளப்பவள்
வாசம் நிறைந்த பெண்ணவள்
பெண்களையும் போற்றியே
வாழ்த்துக்கள் கூறினாலும்
அவர்கள் கடன் தீராதம்மா
இன்றைய பெண்கள் தானே

சாதனைப் புரிந்து பலர் – உலகம்
போற்ற வாழ்த்துவோமே
வீட்டைக் காக்கும் பெண்மையவள்
தன்னையுமே தியாகம் செய்து
நம்மையுமே வாழ வைக்கும்
பெண் கல்வியைப் போற்றுவோமே!
பெண் கல்வியைப் போற்றுவோமே (தந்தனத்தோம்)

www.Padasalai.Net

**5. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.**

- தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.
- இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.
- சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.
- தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணச் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர்.
- மேலும் ஆதரவற்ற பெண்களுக்காக 1930 இல் அவ்வை இல்லம், 1952-இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவி பெண்மைக்கே புரட்சி படைத்தவர் மருத்துவர் முத்துலெட்சுமி ஆவார்.

**6. நீலாம்பிகை அம்மையாரின் தமிழ்ப் பணி குறித்த சிறப்பம்சங்களை எழுதுக.**

- தமிழுக்கு வித்திட்ட மறை மலையடிகளின் மகள் நீலாம்பிகை அம்மையார் தந்தையைப் போலவே தனித்தமிழ் பற்றுடையவர்.
- தனித்தமிழ் கட்டுரை
- வடசொல் தமிழ் அகரவரிசை
- முப்பெண்மணிகள் வரலாறு
- பட்டினத்தார் பாராட்டிய மூவர்

ஆகிய நூல்கள் இவரது படைப்புகளாகும். தனித் தமிழில் எழுதுவோர்க்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

## கூடுதல் வினாக்கள்

**1. ஹண்டர் குழு - குறிப்பு வரைக.**

1882இல் ஹண்டர் குழு முதன் முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்தது. அந்த அறிக்கையின்படி மராட்டிய மாநிலத்தில் ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே இணையர் முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினார்கள்.

**2. ஈத இராஜேஸ்வரி அம்மையார் அறிவியல் துறை பணியை எழுதுக.**

தமிழ், இலக்கியம் அறிவியல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாகப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

**3. களர்நிலம் - என பாரதிதாசன் விதித்துரைப்பது யாரை? ஏன்?**

கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் முதலானவைதான் விளையலாம். நல்ல பயிர் விளையாது. அதுபோல அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள்.

**4. இன்பம் சமைப்பவர் யார்? அவர்களுக்கு வேண்டுவது யாது என்று பாரதிதாசன் கூறுகிறார்?**

இன்பம் சமைப்பவர் பெண். சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கும் மேலாக இன்பத்தையும் சமைக்கின்றார்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**5. சிறுபஞ்சமூலம் - குறிப்பு தருக.**

| | |
|---|---|
| ஆசிரியர் | – காரியாசன் |
| நூல் | – பதினெண்கீழ்க்கணக்கு நூல் – சிறுபஞ்சமூலம் |
| பொருள்கள் | – கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி |
| பயன் | – அறியாமை நீக்கி வாழ்வியல் உண்மையைக் கூறும் நூல். |

**6. ஓகாரம் - இடைச் சொல் தற்காலத்தில் பயன்படும் முறையைக் கூறுக.**

தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது.

- இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)
- பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள். (இது அல்லது அது)
- பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை – அதுவும் இல்லை)

## நெடு வினா

**1. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.**

**வீரமங்கை வேலுநாச்சியார்:**




இந்திய சுதந்திரப் போராட்டங்களில் ஆண்கள் மட்டுமின்றி, பெண்களும் வீரப்போர் புரிந்தனர். அவர்களில் ஒருவராக விளங்கி நாட்டினை மீட்டிட புரவி ஏறி வேலும் வாளும் வீசி ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்ட வீரமங்கைதான் வேலுநாச்சியார்.

இளமையிலேயே வீரமும் விவேகமும் நிறைந்து விளங்கியவர். நூல்கள் பலவற்றை ஆராயும் திறனும் பெற்றிருந்தார். வீர விளையாட்டுகள் அவரது ரத்த அணுக்களில் உறைந்திருந்தது எனலாம். பிறவியிலேயே வீரமும், விவேகமும் கொண்ட வேலு நாச்சியார், வில், வாள், வேல், அம்பு, ஈட்டி எறிதல், சிலம்பம் ஆடுதல், வளரி வீசுதல், குதிரையேற்றம், யானை ஏற்றம் என அனைத்துப் போர்க் கலைகளிலும் சிறந்து விளங்கி வந்தார்.

வியாபாரத்தின் பேரில் வந்த ஆங்கிலேயர், இந்திய நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டதோடு, அரசாண்டு வந்த சிற்றரசர்களிடம் வட்டி, வரி, கிஸ்தி என வசூலிக்கவும் தொடங்கினர். கொடுத்தவர்களை ஆட்சி ஆளச் செய்தும், மறுத்தவர்களை ஆட்சியிலிருந்து இறக்கவும், சமயத்தில் அவர்களை கொன்றும் வந்தனர். அந்த வகையில் வரி கொடுக்க மறுத்து வந்த சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த முத்து வடுகநாதத் தேவரையும் சுட்டு வீழ்த்துகின்றனர் ஆங்கிலேயர்.

கோவலன் கொலையுண்டதைக் கண்டு கண்ணகி கொதித்தெழுந்து வஞ்சம் தீர்க்கப் புறப்பட்டது போல, வீரமங்கை வேலுநாச்சியாரும், வஞ்சம் தீர்க்கப் புறப்பட்டார். முதலில் ஆங்கிலேயர்களின் பரம எதிரியான ஹைதர் அலியின் உதவியுடன் படையைத் திரட்டி, ஆங்கிலேயரிடமிருந்து சிவகங்கைச் சீமையை மீட்டு, ஆட்சிபீடத்தில் அமர்ந்த வீரமங்கை வேலுநாச்சியாரின் வரலாறு.

**ஜான்சிராணி:**



வீரத்தின் உறைவிடமாய்த் திகழந்து, ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு, நாட்டிற்காக தனது இன்னுயிர்களை ஈந்தவர்களில் முக்கியமானவராய்த் திகழ்ந்து வருபவர் ஜான்சிராணி லட்சுமிபாய் ஆவார். சாதாரண குடும்பத்தில் பிறந்து, அரச குடும்பத்தை சேர்ந்தவராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவர் தான் ஜான்சிராணி.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

மனுபாய் என்ற பெயர் கொண்டவர். ஜான்சி மன்னரான கங்காதாரராவை மணமுடித்ததின் பேரில் லட்சுமிபாயாகி ஜான்சி ராணியானவர். மன்னர் கங்காதார ராவ் – ஜான்சிராணி தம்பதியினர்க்கு பிள்ளையில்லாததினால், ஆனந்தராவ் என்ற தாமோதரராவை தத்து எடுத்துக் கொண்டனர். மன்னருக்குப் பின்னே தாமோதரராவ் ஆட்சி ஆள பிரிட்டிஷாரிடம் உரிமை கோரினர். கோரிக்கை பிரிட்டிஷ் ஆட்சி ஏற்றுக்கொள்ளாததினால் மன்னரின் உயிரும் பிரிந்தது.

சுவீகாரப் புத்திரர்க்கு நாடாளும் உரிமை வேண்டும் என்று போராட்டத்தில் குதித்தார் ஜான்சிராணி. பேஷ்வா மன்னர் தாந்தியாதோபி போன்றோருடன் உடன்படிக்கை செய்து கொண்டு பிரிட்டிஷ் அரசுக்கு தக்க பதிலடி கொடுத்து வந்தார். இருப்பினும், கயவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டதினாலும் படைகள் சிதறியதினாலும் ஜான்சிராணி போரில் மடிந்தார்.

"இந்திய புரட்சி இயக்கம் கண்ட வீரர்களை, துணிச்சல்மிக்க அச்சமற்ற மிகச்சிறந்த இராணுவத் தலைவர் ஜான்சிராணி லட்சுமிபாய் தான்". இவ்விதம் பிரிட்டிஷ் அரசின் படைத் தளபதி ஜெனரல் ஹியூரோஸ் கூறியுள்ளார். எதிரியாலேயே இவ்வளவு புகழ்ந்துரைக்கப்பட்ட வீரப் பெண் ஜான்சிராணி லட்சுமிபாயின் வாழ்க்கை வரலாறு. ஒரு நாட்டின் ஏற்றத்திற்கும், சிறப்புக்கும் அழியாப்புகழுக்கும் அஸ்திவாரமாகும்.

**ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்:**



*சேவை செய்வதே ஆனந்தம் - பிறர்*
*சேவை செய்வதே ஆனந்தம்*

என்ற பாடலுக்கேற்ப சேவையல் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருபவர்கள் சிலர்.

*செய்யும் தொழிலே தெய்வம் - அதில்*
*திறமை தான் நமது கடமை*

என்பது போன்று அந்தக் காலத்தில் செவிலியர் தொழில் (நர்ஸ் தொழில்) மக்களிடத்திலே மதிப்பில்லா தொழிலாக இருந்து வந்தது. அந்த தொழிலை தெய்வமாக மதித்து செய்து வந்தவர் தான் ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்.

ரஷியாவுக்கு எதிராக இங்கிலாந்து நடத்திய போரில் குலையுயிரும், குற்றுயிருமாக பலத்த காயங்களுடன் அவதிப்பட்டு வந்த போர்வீரர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மருத்துவமனையில் செவிலியராகப் பணி செய்து வந்தார். மின்விளக்கு வசதியில்லாத அந்த காலத்தில் கையில் மண்ணென்ணெய் விளக்கினை ஏந்திக்கொண்டு ஒவ்வொரு நோயாளியையும் பார்த்து அவர்களுக்கு வேண்டிய சிகிச்சையினை செய்து வந்தார்.

*கை விளக்கேந்திய காரிகை*
*தீபம் ஏற்றிய சீமாட்டி*

என்றெல்லாம் உலகமக்களால் இன்றும் போற்றப்பட்டு வரும் அவரது சேவைதனை பாராட்டி இங்கிலாந்து அரசு அவருக்கு 'Order of Merit' என்ற விருதினை கௌரவித்துள்ளது.

**2. குடும்ப விளக்கு நூலின் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.**

செல்வத்தைக் காட்டிலும் நிலைத்த புகழுடைய கல்விதான் ஒருவருக்கு வாழ்வின் இறுதிவரையிலும் கைகொடுக்கிறது. கல்வி பெறுதலே பெண்டிர்க்கு அழகு. ஆனால் இடைக்காலத்தில் பெண்கள் கல்வி பெறாமல் இருந்தனர். ஆனால் தற்காலத்தில் பெண்கள் இல்லாத துறையே இல்லை என்னும் அளவிற்குப் பெண்கல்வி வளர்ச்சியடைந்துள்ளது.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பெண்கல்வி:

| | தலைவி கருத்து | இன்றைய கருத்து |
|---|---|---|
| 1. | கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலம் போன்றவர். புல் பூண்டு விளையும் – பயிர் விளையாது. கல்வி பெற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலம் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த மக்கள் உருவாகின்றனர் | இன்று கல்வியறிவு பெறாத பெண்களே இல்லை என்ற நிலையல் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர். அதனால் ஒவ்வொரு வீட்டிலும் கல்வியறிவு பெற்ற மக்களே உருவாகின்றனர். |
| 2. | வானூர்தி செலுத்துதல் உலகையும், கடலையும் அளத்தல் – போன்ற செயல் அன்று ஆண்களுக்கு மட்டுமே இருந்தது. | வானூர்தி செலுத்துதல் விண்ணில் சென்று ஆய்வு செய்தல் போன்ற விண்ணையும் அளக்கும் அளவுக்கு பெண்களின் முன்னேற்றம் வளர்ந்துள்ளது. |
| 3. | பெண்களின் விடுதலை அவர்களின் செயல் களிலே இருந்தது. மின்னல் போல் ஒளிரும் இயல்புடையவர்கள் பெண்கள். ஆனால் கல்வியறிவு இல்லாததால் வாழ்வில் ஒளிரவில்லை. | இன்று பெண்கள் மின்னலைப் போன்று ஒளிர்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். தான் வாழ்விலும் ஒளிர்விட்டு மகிழ்கின்றனர். |
| 4. | வீட்டு வேலை செய்வது சமைப்பது போன்ற வேலைகள் பெண்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்று கூறினர். ஆண்கள் இவ்வேலைகள் நமக்கும் உரியவை என்று எண்ண வேண்டும். சமைக்கும் போது இன்பத்தையும் சேர்த்தே சமைக்கின்றனர். | இது போன்ற வேலைகள் செய்வதில் இன்றும் ஓரளவு பெண்களுக்குச் சுமையாகத் தான் இருக்கின்றது. ஆனாலும் ஆண்கள் எண்ணம் சிறிது சிறிதாக மாறிக்கொண்டே வருகின்றது எனலாம். |
| 5. | சமைக்கும் கலத்தில் கலவையை இட்டு கலக்குவது மட்டும் சமையல் ஆகாது. அதோடு அன்பைச் சேர்த்தும் பரிமாற வாழ்வு நலம் பெறும். | சமைப்பதை ஒரு கலையாக நினைத்து பரிமாறி அன்போடு சமைத்து மகிழ்கின்றனர் பெண்கள். |
| 6. | சமைக்கும் பணி பெண்களுக்குத்தான் உரியது என்ற நிலை மாற வேண்டும். அப்போது தான் பெண்களுக்குக் கல்வி கிடைக்கும் என்கிறார். தலைவி. | தற்போது பெண்கள் சமைப்பதைத் தன் கடமையாக ஏற்றுச் செய்கின்றனர். மேலும் கல்வியிலும் எல்லா உரிமைகளும் பெற்று தன்னிறைவு அடைந்து கொண்டே வருகின்றனர் என்பது சிறப்பாகும். |

**3. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?**

**முன்னுரை:**

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'
நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ்'

என்பது புதுமொழி. ஆம் அறிவு சிறக்க ஊருக்கோர் நூலகம் வேண்டும் என்ற நிலை மாறி "வீட்டிற்கோர் புத்தகசாலை' வேண்டும் என்பதே அண்ணாவின் பேச்சில் வெளிப்படும் கருத்தாகும்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஒரு நாட்டை உலகம் மதிப்பது அந்த நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டே மாநிலம் மதிக்கும் மனவளம் வேண்டும். கல்வியறிவுடையோர் வீட்டிற்கும் நாட்டிற்கும் சிறப்பளிக்கும்படி இருக்கின்றனரா? என்றால் இல்லை. என்று தான் கூற வேண்டும். பிறநாடுகள் நம் நாட்டை மதிக்க வேண்டும் என்றால் இந்த சூழ்நிலை மாற வேண்டும்.

"வீட்டிற்கோர் புத்தகசாலை" என்பதை இலட்சியமாகக் கொண்டு செயல்பட வேண்டும். மனவளத்தைப் பெறலாம். முன்பைவிட வசதிகள் நமக்கு உள்ளன.

முன்பு குருகுலக் கல்வி இருந்த காலம்; ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம் ஆனால் தற்போது உலகை நமது வீட்டிற்கு அழைத்து வந்து காட்டக் கூடிய காலம். பாமர மக்களும் பாராளும் காலம்.

வீட்டில் மேசை, நாற்காலி போன்ற பல பொருட்கள் இருக்கும் வீட்டில் புத்தக சாலை இருக்காது. அலங்காரப் பொருள்களுக்குத் தரப்படும் நிலைமாறி புத்தகசாலைக்கு இடம்தர வேண்டும். உணவு, உடை – அடிப்படைத் தேவையோடு அறிவுப் பசிக்கும் முதலிடம் தர வேண்டும்.

மக்களின் மனத்திலே உலக அறிவு புகழ வேண்டும் என்றால் உலக நிபுணத்துவத்தோடு கூடிய புத்தகங்கள் இல்லையென்றாலும் அடிப்படை உண்மைகள் அடங்கிய சில நூல்களாவது வேண்டும்.

வீடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் பரிசளிப்பு விழா நடத்தும் போதும் புத்தகங்களைக் கொடுக்கலாம்.

- உலக அறிவைத் தரக் கூடிய புத்தகங்கள்.
- ஒழுக்கம், வாழ்வு – கற்றுத்தரும் திருக்குறள்
- விஞ்ஞான கண்டுபிடிப்பு – தகவல்கள்
- மக்களின் மனமாசு துடைத்தவர்கள்
- வீரர்கள், விவேகிகள் வாழ்க்கைக் குறிப்புகள்
- பூகோள, சரித புத்தகங்கள்
- சங்க இலக்கியங்கள் – உரை நூல்கள்
- நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள்
- தொலை தேசங்களைக் கண்டவர்கள்

**முடிவுரை:**

இதன் அடிப்படையில் வீட்டிற்கோர் 'புத்தகசாலை' அமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்கும் போது வீட்டுநிலை மற்றும் நாட்டுநிலை முன்னேறும் வீட்டிற்கோர் 'புத்தகசாலை' அமைக்க வேண்டும் என்ற அண்ணாவின் கருத்துகளை ஏற்று வீட்டிற்கோர் 'புத்தகசாலை' அமைப்போம்.

## மொழியை ஆள்வோம்!

**ஒப்பிட்டுச் சுவைப்போம்.**

| பாப்பா பாட்டு | Child's Song |
|---|---|
| ஓடி விளையாடு பாப்பா, – நீ | Run about and play my sweet little Child |
| ஓய்ந்திருக்க லாகாது பாப்பா, | And idle not sweet little child; |
| கூடி விளையாடு பாப்பா, – ஒரு | In game and sport have many mates |
| குழந்தையை வையாதே பாப்பா | And revile not any one child. |
| காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு | Rise at dawn to learn your lesson, |
| கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு | Then sing such airs that are soothing, |
| மாலை முழுதும் விளையாட்டு – என்று | To games devote the whole evening, |
| வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா. | Get habituated thus, oh child! |

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**மொழிபெயர்க்க.**

- Akbar said, "How many crows are there in this city?"
  இந்த நகரத்தில் எத்தனைக் காகங்கள் இருக்கின்றன? என்று அக்பர் கேட்டார்.
- Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nice crows, my lord".
  ஒரு கணம் கூட யோசிக்கமால் பீர்பால் ஐம்பதாயிரத்து ஐந்நூற்று எண்பத்து ஒன்பது (50589) காகங்கள் இருக்கின்றன என்று கூறினார்.
- "How can you be so sure?" asked Akbar.
  எப்படி நீங்கள் உறுதியாகக் கூறுகிறீர்கள் என்றார் அக்பர்.
- Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".
  பீர்பால் கூறினார். உங்கள் வேலையாட்களைக் கொண்டு எண்ணிப்பாருங்கள். மன்னா, ஒருவேளை நான் கூறிய எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தால், அருகில் உள்ள உறவினர் காகங்கள் வந்து சேர்ந்து இருக்கலாம், அவ்வாறில்லால் எண்ணிக்கையில் குறைந்தால் இங்குள்ள காகங்கள் அருகில் உள்ள உறவினர் காகங்களைக் காணச் சென்றிருக்கலாம்.
- Akbar was pleased very much by Birbal's wit.
  அக்பர் பீர்பாலின் அறிவுக்கூர்மையைக் (அறிவாற்றல்) கண்டு மகிழ்ந்தார்.

www.Padasalai.Net

**பிழை நீக்கி எழுதுக.**

1. மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.
   விடை: மதினா சிறந்த இசை ஞானியாக வேண்டும்.
2. நல்ல தமிழுக்கு எழுதுவோம்.
   விடை: நல்ல தமிழில் எழுதுவோம்.
3. பவளவிழிதான் பரிசு உரியவள்.
   விடை: பவளவிழிதான் பரிசுக்கு உரியவள்.
4. துன்பத்தால் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.
   விடை: துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.
5. குழலியும் பாடத் தெரியும்.
   விடை: குழலிக்கும் பாடத் தெரியும்.

**இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.**

(எ.கா.) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.
பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

1. அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
   விடை: அலுவலர் வந்தவுடன் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
2. சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.
   விடை: சுடர்க்கொடியும் மாலனும் பாடினார்கள்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

3. பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.

விடை: பழனிமலையைக் காட்டிலும் இமயமலை பெரியது.
(பழனிமலையைவிட இமயமலை மிகப்பெரியது)

4. கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.

விடை: கவலையற்றது எதிர்காலம் ஆயினும் கல்வியே நிகழ்காலம்.

## விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

**புத்தகத் திருவிழா**

நாள் – செப்டம்பர் 19 முதல் 28 வரை

இடம் – சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

நேரம் – காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை.

(முதல்நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்)

நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)

அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!

விடை:

மிகப் பழமையான ஓலைச்சுவடிகள் இருக்கின்ற தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் செப்டம்பர் 19 முதல் 28 ஆம் தேதி வரை, காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை மாபெரும் புத்தகத் திருவிழா நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியினைக் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார். மேலும் ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீட்டு விழா மற்றும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெற உள்ளது. அனைவரும் வாரீர் அண்ணாவின் கூற்றுப்படி ஒவ்வொரு வீட்டிலும் 'புத்தகசாலை' வேண்டும் என்பதற்கு ஏற்ப புத்தகத் திருவிழாவில் அரிய பல புத்தகங்களை வாங்கிப் பயன் பெறலாம். அறிவுச் சிந்தனை பெறலாம்.

## நிகழ்வினைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க.

அண்ணாவின் வாழ்க்கையில்.....

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்று அறியாமலே திறந்துகாட்டச் செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்துமடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது. உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று, "தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றார். ஆனால், அண்ணா அவர் உதவியாளரிடம், "இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக்கொள்ளுங்கள்" என்றார். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்து விடப்போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, அண்ணா, "நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப்போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலை பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர்பதவிக்கு வரவேண்டும். அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்" என்றார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**1. மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் எப்படி அறிந்தார்?**

வருவாய் அலுவலர் மகிழுந்தின் பின்பக்கம் திறந்து காட்டச் சொன்னார். அப்போது மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள் வாழ்த்து மடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் அறிந்தார்.

**2. அண்ணாவிடம் ஏன் வருவாய் அலுவலர் பொறுத்துக்கொள்ளச் சொன்னார்?**

முதலமைச்சரின் மகிழுந்து என்று தெரியால் சோதனை செய்து விட்டதால் வருவாய். அலுவலர் அண்ணாவிடம் சென்று பொறுத்துக் கொள்ளச் சொன்னார்.

**3. அண்ணா, வருவாய் அலுவலரின் செயலை எவ்வாறு பாராட்டினார்?**

நாங்கள் போடும சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்ற அலுவலரின் கையில் தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள் தாம் உயர் பதவிக்கு வரவேண்டும். அதற்காகத் தான் உங்கள் பெயரைக் கேட்டேன் என்று கூறி பாராட்டினார்.

**4. பத்தியில் இடம்பெறும் இடைச் சொற்களைக் கொண்டு இரு புதிய சொற்றொடர்களை உருவாக்குக.**

பத்தியில் இடம் பெறும் இடைச்சொற்கள்:

கு, ஆக, அது, ஆனால், விட, போன்ற, ஐ தான்.

1. 'கபிலரது பாட்டு' என்ற தொடர் கபிலரது பாட்டுத் திறமைக்குச் சான்றாகும். (அது, கு)
2. உலகப் பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறளே சிறந்த நீதி நூல் ஆகும். (ஏ)

www.Padasalai.Net

5. நிகழ்வுக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.

"நேர்மையே வெற்றியின் படி"

## மொழியோடு விளையாடு

**சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை உருவாக்குக.**

| | | | |
|---|---|---|---|
| மாணவர்கள் | ஆசிரியர் | பாடவேளை | கரும்பலகை |
| புத்தகம் | எழுதுகோல் | அழிப்பான் | வழிப்பாட்டுக் கூட்டம் |
| அறை | கல்லூரி | உயர்நிலை | சீருடை |
| மடிக்கணினி | | | |

**விடை**

1. வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் சீருடையுடன் நின்றனர்.
2. உயர்நிலைப்பள்ளி மாணவர்களிடம் ஆசிரியர், பாடவேளையில் எழுதுகோல், அழிப்பான் வைத்திருக்க வேண்டும் என்று கூறினார்.
3. கல்லூரி மாணவர்கள் மடிக்கணினியின் மூலம் கல்வி கற்கின்றனர்.
4. கல்லூரி வகுப்பறையில் கரும்பலகை பயன்பாடு இல்லாமல் கணினி மூலம் கற்பிக்கப்படுகிறது.

**அகராதியில் காண்க.**

அரங்கு, ஒட்டம், கான், நசை, பொருநர்

அரங்கு – ஊடுருவு (வினை)

அரங்கு – அரங்கம் – காட்சிப்பொருள் வைக்கப்பட்டுள்ள இடம் (பெயர்)

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஒட்பம் – மதிநலம், அறிவு, முன்னுணர்வு

கான் – காடு

நசை – விரும்பு, அன்பு கொள்.

பொருநர் – வீரன், கூத்தன்

---

**படங்களை இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(ஒரு கிராமத்து நதி, கிழவனும் கடலும், கருப்பு மலர்கள், சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம், தண்ணீர்தண்ணீர்)

1. நா.காமராசனின் கவிதை நூல்.....



விடை: காமராசனின் கவிதை நூல் **கருப்பு** மலர்கள்.

2. திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடகநூல்.



www.Padasalai.Net

விடை: **தண்ணீர் தண்ணீர்**

3. நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேவின் குறுநாவல்




விடை: கிழவனும் கடலும்

4. சிற்பியின் சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற கவிதை நூல்



விடை: ஒரு கிராமத்து நதி.

5. எஸ்.ராமகிருஷ்ணனின் சிறார் நாவல்.




விடை: சாக்ரட்ஸின் சிகப்பு நூலகம்.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



எட்டாத தனியாக இருந்த கனியை
எட்டிப் பிடிக்க வைத்து
ஏட்டினைக் கையில் எடுத்து
கல்வி சமைத்தோம் நாங்கள்
சமைத்த கல்வியைக் கொண்டு
அன்போடும் பண்போடும் தரணியிலே
சுவைக்கச் செய்வோம். ஆம்
தடைகள் பல கடந்து தரணியில்
இன்று தரணி சிறக்கின்றது என்றால்
நாங்கள் தடைகள் பல கடந்து
தடையில்லா கல்வி கற்று
தரணியை ஆளுகின்றோம்.

**கடிதம் எழுதுக .**

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்தினைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**விடுநர்**

சி. முருகன்
'9'–ம் வகுப்பு
பாரதியார் மேல்நிலைப்பள்ளி,
திருப்பெருந்துறை, புதுகோட்டை மாவட்டம் – 643 005.

**விடுநர்**

நெய்தல் பதிப்பக மேலாளர்,
நெய்தல் பதிப்பகம்,
சென்னை – 600 001.

**ஐயா,**

வணக்கம், எங்கள் பள்ளி நூலகத்தில் மாணவர்களுக்குக் கல்வி சார்ந்த நூல்களும், அறிவ வளர்ச்சிக்குத் தேவையான நூல்களும் உள்ளன. அகராதி வகைகளில் தமிழ் – தமிழ் – ஆங்கில கையடக்க அகராதி இல்லை. தங்கள் பதிப்பகத்திலிருந்து தமிழ் – தமிழ் – ஆங்கிலம் கையடக்க அகராதிகள் பத்து அனுப்பித் தருமாறு வேண்டுகிறேன். மேலும், இதற்கான பணமும், பதிவஞ்சலில் அனுப்பிப் தருவதற்கான பணமும் சேர்த்து ரூபாய் ஆயிரத்து இருநூற்று ஐம்பது (1250) காசோலையாக (D.D) இணைத்து அனுப்பியுள்ளேன். ஒரு வார காலத்திற்குள் அகராதிகள் கிடைக்கும்படி அனுப்புமாறு வேண்டுகிறேன்.

நன்றி

இடம் : திருப்பெருந்துறை. இப்படிக்கு,
நாள் : 04.10.2018. சி.முருகன்.

உறைமேல் முகவரி:


நெய்தல் பதிப்பக மேலாளர்,
நெய்தல் பதிப்பகம்,
சென்னை – 600 001.

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

**செயல்திட்டம்.**

**பெண்கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் பற்றிய செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.**

**பாவேந்தர் பாரதிதாசன்:**




"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டின்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

- பாரதிதாசன்

தோளை உயர்த்திச் சுடர் முகம் தூக்கிப் புத்துலகை ஆக்கிடத் தூண்டும் பாவேந்தர் "பெண்களால் தான் நாடு திருந்தும்" என எடுத்தோதுவர் "நல்ல குடும்பம் பல்கலைகழகம்" எனத் தெளிவுறுத்தியவர்.

"பெண்கட்குக் கல்வி வேண்டும் குடித்தனம் பேணுவதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும் மக்களை பேணுவதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும் உலகினைப் பேணுவதற்கே
பெணகட்குக் கல்வி வேண்டும் கல்வியைப் பேணுவதற்கே

**கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை:**




"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"

என பாடிப் பெண்ணின் பெருமையைக் கூறுகிறார்.

www.Padasalai.Net


**செய்கு தம்பி பாவலர்:**



"பெண்ணே பெண்ணே பெண்மணியே பெருமை நிறைந்த பெட்டகமே
பண்ணே நிகர்த்த மொழிமறவாப் பைம் பொற்கிளியே பசுந்தேனே!

என்று பெண்மையைப் பழங்காலத்தில் போற்றப்பட்டது. இடைக்காலத்தில் பேணப் படாமையினையும் சுட்டி, வருங்காலத்தில் பெண்மையைப் போற்றுவர் என்றும் கூறுகிறார்.


**மகாகவி பாரதியார்:**



"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள்
செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என பெண்கல்வியின் அவசியத்தை முதலில் பாடியவர் பாரதி.


**ஈ.வெ.ரா.பெரியார்:**



"பெண்கள் கல்வி கற்றாலொழிய
சமூக மாற்றங்கள் ஏற்படா" என்றார்

பெண்களுக்கு ஆராய்ச்சிப் படிப்பு படிக்க வேண்டும். அரசுப் பணியில் எல்லா வகையான பணியும் வழங்க வேண்டும் என்று கூறி பெண்கல்விக்குப் பாடுபட்டவர்.

**வெ.இராமலிங்கனார்:**



"தன்னை மறுப்பும் சகிப்புத் தன்மையும்
இயல்பாய் அமைந்தும் இன்பசொருபமமாய்த்
தாயாய் நின்று தரணியைக் தாங்கும்
தாரமாய் நின்று தளர்வைப் போக்கும்"

இப்பாடலில் வெ.இராமலிங்கனார் பெண்ணைத், தாய், மனைவி, தமக்கை, தங்கை, மகள் என்று பெண்மையைச் சுட்டிக்காட்டுகின்றார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# நிற்க அதற்குத் தக

எனக்குப் பிடித்தவை / என் பொறுப்புகள்

1. என்னை உயர்வாகப் பேசுவது எனக்குப் பிடிக்கும்.
   எவரையும் காயப்படுத்தாமல் நடந்துகொள்வது, குறைகூறாமல் பேசுவது என் பொறுப்பு.
2. எனக்குப் படம் வரைவது பிடிக்கும்.
   பள்ளிச்சுவர், வீட்டுச்சுவர், பொதுச்சுவர் ஆகியவற்றால் வரையாமல் எழுதாமல் இருப்பதோடு பிறரையும் அவ்வாறு செய்யவிடாமல் தடுப்பது என் பொறுப்பு.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சமூக சீர்திருத்தவாதி | – | Social Reformer | தன்னார்வலர் | – | Volunteer |
| களர்நிலம் | – | Saline Soil | சொற்றொடர் | – | Sentence |

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## Stockists

| | |
|---|---|
| **M.Arumugam Pillai & Sons**, Tirunelveli Junction. Ph.: 0462 - 2322203 | |
| **M.Arumugam Pillai & Sons**, Nagercoil, Ph.: 04652 - 230728 | |
| **M.Arumugam Pillai Book Centre**, Palayamkottai, Ph.: 0462 - 2575203 | |
| **Padma Book Stall**, Tirunelveli Junction. Ph.: 0462 – 2337650 | |
| **Eagle Book Centre**, Palayamkottai. | |
| **Sri Murugan Book Centre**, Tuticorin, Ph.: 0461 - 2333842 | |
| **Aruna Store**, Ramnad, Ph.: 04567 - 221294 | |
| **Mano Book Centre**, Pudumandapam, Madurai, Ph.: 0452 - 2621577 | |
| **Meenakshi Book Shop**, Madurai. Cell: 94432 62763 | |
| **Jayam Book Centre**, Madurai, Cell: 9894658036 | |
| **M.K. Store**, Chennai. | |
| **Majestic Book House**, Coimbatore, Ph : 0422-2383055 | |
| **Sri Rajaganapathy Puthaga Nilayam**, Coimbatore, Cell: 94438 92421 | |
| **Kannan Puthaga Nilayam**, Coimbatore, Ph.: 0422-2398890 | |
| **Dhana Book Company**, Erode, Ph.: 0424-2221230 | |
| **Senthil Book Palace**, Erode, Ph.: 0424-2214311 | |
| **Selvam Books**, Erode, Ph.: 0424-2257027 | |
| **Chitra Devi Book Center**, Tirunelveli Junction. | |
| **Sri Shyamala Puthaga Angadi**, Tirunelveli Junction. | |
| **Sri Rajaganapathy Cards**, Salem, Cell: 9443006703 | |
| **Chitra Devi Book Center**, Kovilpatti. | |
| **Kiruba Stationary**, Kellakurichi. | |
| **A. Pichandimudaliar**, Thiruvanamalai. Cell: 94432 14725 | |
| **Eagle Books**, Tuticorin, Ph.: 0461-2392333 | |
| **Sri Durga Stores**, Tuticorin. Ph.: 096003 33452 | |
| **Rasi Publication**, Trichy. | |
| **Sumathi Publication**, Trichy. | |
| **Trichy Book House**, Trichy. | |
| **P. Murugantham**, Cadalloor. Cell: 70104 99617 | |
| **Krishna Trading**, Panruti. | |

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html